DINAMALAR 20 JUNE 09

# பசுமைக் கரங்கள் திட்டம் 10 ஆயிரம் மரக்கன்றுகள்

**சூலூர், ஜூன் 20-**

ஈஷா யோகா மையத்தின் பசுமைக் கரங்கள் திட்டத்துக்காக, சூலூரில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன.

சூலூர், லயன்ஸ் கிளப் உறுப்பினர்கள் மனோகரன், விஜயகுமார் கூறியதாவது:

ஈஷா அறக்கட்டளை சார்பில், பசுமைக்கரங்கள் திட்டத்தில், தமிழகத்தின் பசுமையைக் காக்கவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், இயற்கை வளங்களைக் காப்பாற்றவும் 11.4 கோடி மரங்கள் நட்டு வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் உணவுப் பொருள், கட்டுமானப் பொருள், ஊட்டச்சத்து குறைபாடு நீக்குதல், இயற்கை அழிவுகளை தவிர்த்தல், நீர் வளம் அதிகரித்தல் உள்ளிட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சூலூரில் இத்திட்டத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும், 10 ஆயிரம் மரக்கன்றுகள் வளர்க்கப் பட்டு வருகின் றன. செப்., மாதம் பொது மக்களுக்கு வளர்ப்பதற்காக வழங்கப்படும். இந்த பணியில் ஈஷா மையத்தினர் ஆர்வமுடன் செயலாற்றி வருகின்றனர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.